Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு
(1889)
ஆவணிமீ 28உ
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ சித்திரைமீ உகஉ வெள்ளிக்கிழமை (3 MAY. 1957) [இல- ௪]

அரசியல் அலை

## விடுதலைப் போராட்டம் இங்கே

## விழாக் கொண்டாட்டம் அங்கே

## மசுக்கோவுக்கு ம.ஐ.மு. யாத்திரையாம்

ஆவணி மாதம் இலங்கையில் விடுதலை இயக்கம் தமிழக மக்களால் ஆரம்பிக்கப்பட இருக்கும்பொழுது உருசிய நாட்டில் நடக்கும் மசுக்கோ (Moscow Festival) விழாவுக்கு ம. ஐ மு; விருந்தினரை அனுப்பத் தீர்மானித்திருக்கின்றதாம்.

தொழில் மந்திரி இலங்கரத்தின இந்த வைபவத்தைச் சிறப்பிப்பதற்குத் துரிதமாகவும் சுறு சுறுப்பாகவும் ஒழுங்குகள்செய்து வருகின்ருர். ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஐந்துபேர் — ம. ஐ. முன்னணிக் கட்சியினர் உருசிய தலைநகருக்கு உல்லாச விழாவிற் பங்குபற்ற அனுப்பப்படுவார்களாம். உடன் பிறந்தார் இங்கே அரசியல் வறுமையால் வாடிப் பரிதபிக்க, உருசியாவில் விழாக்கொண்டாட்டம்! இந்த வேடிக்கை யார் செலவில் .... ... ... ?

மசுக்கோவுக்குப் போகும் ம. ஐ. முன்னணியார் பல திறப்பட்டவர்களாய் இருப்பார்களாம். சங்கீதம், நடனம், சிற்பம் என்ற வகையினர்; சட்டம் மருத்துவம், கல்வி என்ற திறத்தினர்; இவர்களுடன் தொழில் கமம் என்ற உழைப்பாளர்களும். ஆனல் இந்த உழைப்பாளர்கள் சார்பாக உணமையிலே குனிந்து துரும்பெடுக்கமாட்டாத ஆனற் பொற் குவியல்மேற் குந்தியிருக்கும் தலைவர்கள் செல்வார்கள்.

ஐ தே. கட்சி ஆட்சியில் அமெரிக்கா. ம.ஐ.மு. அரசாங்கத்திலே செஞ்சீனவும் உருசியாவும். உணமையில் இலங்கை மக்களின் அரசு நடக்கும்பொழுது யாத்திரைக்குப் பாரத நாட்டிடையே யாவரும் நோக்குவர் என்பதை இப்பொழுது எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

விடுதலைப் போராட்டம் நடக்கும் வேளையிலா வெளியூர் உல்லாச விழாக் கொண்டாட்டம்? பிரதமர் பண்டாரநாயகா தமிழகத்தின் உரிமைப் போராட்டத்தை எள்ளி நகையாடுகின்ருரா அல்லது உருசியாவில் உதவி தேடுகின்ருரா? ——

## திருக்கேதீச்சரம்

## ஆருந் திருவிழா

[ திரு. வி. நவரத்தினம் அவர்கள் எழுதுவது ]

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் திருப்பணியாக திருக்கேதீச்சரத்தில் 24-4-57-ல் ஆருந் திருவிழா நிகழ்ந்தது. அதிற் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் நூற்றுக்கணக்கானேர் பங்குபற்றினர். ஷை கல்லூரிப் பண்டிதர் வி. நவரத்தினம் அவர்கள் கண்ணப்ப நாயனுர் வரலாற்றைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும்கூறிப்பக்தர்களைமகிழ்வித்தனர். 'அன்பு' எனனும் பொருள்பற்றி திரு. த. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் விரிந்த ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினர். திருக்கேதீச்சரத் திருப்பணி வளர்ந்து வரும் வரலாற்றைச் சரித்திர ரீதியாக மிக அழகாக எடுத்துக் கூறிய திரு. கே. கனகரத்தினம் அவர்கள் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவ மாணவிகளின் சமய ஆர்வத்தையும் தலத்தில் நடந்துகொண்ட ஒழுங்கையும் எடுத்துக்கூறி வியந்தனர். பெருந்தொகையான மாணவிகளும் ஆசிரியைகளும் மற்றும் மகளிரும் பங்குபற்றியதை ஆண்டு முதல்முறை தாம் பார்த்ததாகவும் கல்லூரி மாணவ மாணவிகளிடத்தில் காணப்படும் சமய சமயசீலமும் பக்தியோடு அமைதியான முறையில் வழிபாடு செய்யும் ஒழுங்கும் தம்மைப் பெரிதும் கவர்ந்ததாகவும் பண்டிதரது சொல் முழக்கத்தைக் கேட்டு வந்த பெருமழை திரும்பி ஓடிவிட்டதாகவும் தமது முன்னுரையிலும் முடிவுரையிலும் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எடுத்துக் கூறி ஆருந்திருவிழா நடத்திய அன்பர்களைப் பெரிதும் பாராட்டினர்.

## இருஷிகேசத்திலிருந்து சிவலிங்கம்

புதியதாயமைக்கப்படும் கோணேசர் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்தற்கு வேண்டிய சிவலிங்கம் இருஷிகேசம் ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்களால் அனுப்பப் பெறுகின்றதாம்.

பண்டைக் காலத்தில் விளங்கிய கோணேசர் ஆலயத்தைப்பற்றிய அறிகுறிகள் பல சமுத்திரத்துள் மறைந்து கிடக்கின்றன என்று கருதுதற்குப் போதிய சான்று காணப்படுகின்றயால் அவற்றைப் படம் பிடித்து வெளியுலகுக்கு அறியத்தரும்சேவையை இரு பிரித்தானிய அறிஞர்கள் மேற்கொண்டுள்ளனரென்றும் அறிய வருகின்றது.

## உண்மைஉணர்வேஇன்பந்தருவது

## திருந்திய தியானத்தால் - அது அடைதற்பாலது

தியான யோகம்பற்றி இப்பொழுது சிறிது சிந்திப்போம். தியானம் செய்தலே நாம் செய்ய வேண்டிய கடமைகளெல்லாவற்றிலும் முதன்மை வாய்ந்தது. எங்கள் பிறவியின் நோக்கம் இதுவேயாகும்; மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்து உண்மை உணர்ந்தால் அறியாமை அகற்றப்பட்டு என்றும் குன்ருத இன்பவாழ்க்கையை எய்தலாம்.

சகுணம், நிர்க்குணம் என்பனவாய்த் தியான முறைகள் வேறுபடும். பக்தர்களுக்குச் சகுணத் தியானமும் வேதாந்திகளுக்கு நிர்க்குணத் தியானமும் அமையும்.

உண்மைப்பொருளாவது யாது? அஃதே ஒளி எல்லாவற்றுக்கும் ஒளி கொடுத்து நிற்கும் ஓர் பொருளாகும். அது எல்லோருடைய உள்ளங்களிலும் வீற்றிருக்கின்றது. ஆனல் அறியாமையாகிய திரையால் அது மறைக்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு அகக்காட்சி ஒளி குன்றியிருந்தால் அவர் துன்பமடைகின்ருர். உண்மைப்பொருளைத் தியானஞ் செய்வதால் அவர் நிலையான இன்பமடையலாம். அஞ்ஞானத்துக்கும் முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டு ஒளிக்கு ஒளியாயுள்ள அவ்வுண்மைப் பொருளானது அணிமையாயுள்ள எல்லாவற்றுள்ளும் அணிமையாயிருக்கின்றது. இதை எவ்வாறு அடையலாம்? ஞானத்தாலும், தியானத்தாலும் இது அடைதலாகும்.

ஒவ்வொரு இந்திரியமும் ஒளியாகவேயிருக்கின்றது. ஒவ்வொரு காட்சியும் சோதிமயமானதாயேயிருக்கின்றது. இந்திரியக் காட்சிகள் மூலமாயே உலக அறிவைப் பெறுகின்ருேம். ஆகையினலே இந்திரியங்கள், பிராணன் முதலிய எல்லாம் ஒளியாயே யிருக்கின்றன. இவை எல்லாம் இறைவனுடைய ஒளியால் ஒளியைப் பெறுகின்றன.

இந்த ஒளியைத் தியானம் செய்க. இது உங்கள் உள்ளங்களிலிருந்து தோன்றி எங்கும் வியாபித்து உங்களை உள்ளடக்கி யிருப்பதாகத் தியானித்து உணருங்கள். உங்களை இவ்வாறு உள்ளடக்கிய இவ்வொளி உங்களையும், உங்களைச் சுற்றியுள்ள பொருள்களையும், உலகம் முழுவதையும் உள்ளடக்கியிருப்பதாகத் தியானியுங்கள். அப்படித் தியானிக்கும்பொழுதுஉங்களைவிடப் புறம்பான பொருள் பிறிதொன்று இல்லாததாகிவிடும்.

ஆகையினலே பிரமசோதியாயோ, எங்கும் வியாபகமான உண்மைப் பொருளாயோ தியானியுங்கள். உங்கள் இஷ்ட தேவதையை அல்லது நீங்கள்விரும்பும் மெய்ஞ்ஞானியைத் தியானியுங்கள். அதிகாலையில் அமைதியாய் ஒருமுகப்பட்ட மனத்துடன் வசதியாயிருந்து தூய்மையுடனும் நம்பிக்கையுடனும் பயபக்தியாகத் தியானம் செய்யுங்கள்.

(ஸ்ரீமத் சுவாமி சிவானந்த அவர்களின் பேச்சொன்றின் சாரம்.)

## சிங்களத் தூதுக்கு வரவேற்பு

தனிச் சிங்களச் சட்டம் நீதியானது என்று தமிழ் மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு ஒரு இலட்சம் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கின்ருர்கள் என்ற செய்தியைக் குறிப்பிட்டு, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடந்த கூட்டமொன்றில் திரு. எஸ். எச். பேரின்பநாயகம் அவர்கள் பேசும்போது தூதாகவரும் சிங்களரை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிருேம். ஆனல் இங்குள்ள பொதுசனங்களுக்குத் தமிழ் மாத்திரம்தான் தெரியுமாகலின் அவர்கள் தமிழிற் பேசக்கூடியதாய்த் தமிழ் மொழியைக் கற்று வருமாறு ஆலோசனை கூறுகின்றேன் என்ருர். அப்படித் தமிழ் கற்று வந்தால் எங்கள் கருத்தையும் அவர்களுக்குத் தெரிவித்து அவர்களை நாங்கள் மனம் மாறச் செய்தலும் ஆகும் என்று மேலும் பேசும்போது குறிப்பிட்டார்.

——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்
[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். ஏவிளம்பி வூ சித்திரை மீ
உகஉ வெள்ளிக்கிழமை


## மற்றும் ஒரு மாசாலம்.........?

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் இலங்கைப் பிரதமரின் இதயமோ ஒழுங்குக்கு வருவதாகக் காணப்படவில்லை. நாட்டில் அரசியற் காற்று நிலை மாறிச் சூறாவளியாய் வீசும் கவலைக்கிடமான நிலைமையைக் கண்டும் உண்மையை உணர்ந்து உய்யும் வழி தேட உழைக்கின்றாரில்லைப் பிரதமர் பண்டாரநாயக. ஆக்க வேலையைச் செய்யாதுவிட்டாலும் அவ்வளவு பாதகமிருக்கமாட்டாது. கேடு விளைவிக்கும் வகையிலே மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முயன்று வரும் முதல் அமைச்சரின் இறுமாப்பை என்னென்றுரைப்பது?

ஈழநாடு அந்நியர் ஆட்சியினின்றும் விலகிய வரலாற்றை ஈண்டு எடுத்துக் கூறவேண்டியதில்லை. ஆங்கிலேயரின் அரசு மாறிய துண்மையெனினும் இலங்கையர் ஆட்சி அமைந்திருப்பது சொல்லளவிலேயேயிருக்கின்றது. அரசியல் அமைப்பு இதுவரையும் வரைவிடப்படவில்லை. அவ்வமைப்பின் வரைவிலக்கணத்தை இப்பொழுதுள்ள பாராளுமன்றமோ தனிப்பட்ட முறையிலே தலைவர்களோ கூறமுடியாது. அதற்கென வேணடுகோள்பெற்று மக்களாலே தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் அமைப்புச் சபையே அந்த வரைவிலக்கணத்தைக் கூறிப் புறநடைகள் வேண்டிய வழி புகுத்திப் புது அரசியல் அமைப்பை ஆக்கும் உரிமை உடையது. இநத அரசியற் கொள்கையை அறியாதவர்கள் அரசு நடத்துவதெப்படி?

சாதி மதம் மொழி ஆதியாம் பேதமும் விபரீதமும் காட்டித் தனிச் சிங்களச் சட்டத்தை இயற்றிய பாராளுமன்றத்தையே மறுபடியும் அரசியல்அமைப்பை மாற்றி அமைக்கும்படி ஆணையிடுவதென்றால் இதை யார் ஏற்றுக்கொள்வார்கள்? மொழிப் பழிக்கு அடிகோலிய பாராளுமன்றம் அரசியல் அநீதிக்கும் வழி காட்ட வேண்டும் என்று தலைமை அமைச்சர் வேண்டுகோள் விடுத்திருப்பதை உலகம் அறிந்தால எள்ளி நகையாடாதா?

தமிழகத் தலைவர்கள் இந் நிலைமையிலே வேற்றுமை யென்பது இம்மியளவுமின்றி ஒற்றுமைப்பட்டு உலகததுக்கு இந்த ஒழுங்கீனத்தை எடுத்துக் காட்டுதல் வேண்டும். உள்நாட்டில் ஊரவர்கள் உண்மையை அறியும் வண்ணம் அரசியல் அமைப்பு என்றால் என்ன; அது எவ்வாறு யாரால் அமைக்கப்படுதல் வேண்டும்? என்ற இன்னோரன்ன [illegible]றையும் தெளிவாக விளக்கிக் காட்டி முதல் அமைசசர் இப்பொழுது எடுக்கும் முறையற்ற முயற்சியைத் தடுத்து அரசியல் அமைப்பு அவையை நிறுவுவதற்கு அயராது உழைத்தல் வேண்டும்.

## குரும்பசிட்டி சன்மார்க்கசபை

### வருடாந்த விழா

—0—

மேற்படி சபையின் 22 வது வருடாந்தவிழா ஷை சபை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (30—4—57) மாலை சேர். கந்தையாவைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஸ்ரீ இ. டபிள்யு அரியநாயகம் அவர்களும் செல்வி ஞானேஸ்வரி தம்பு B. A. (Hons) அவர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

சபையாரின் அறிக்கையில், கிராம முன்னேற்றம், சன சமுகநிலையம், இளைஞர் சங்கம், மாதர்சபை, ஐக்கிய நாணய சங்கம், மாதர் ஐக்கியநாணய சங்கம், மணிவாசக நூல்நிலையம் வாசிகசாலை, விளையாட்டுக் கழகம், நாடக மன்றம் ஆகிய பிரிவுகள் செய்த சேவைகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள், சமயப் பகுதி, நீதிப் பகுதி அமைப்பு, ஐக்கியம் என்பன ஏனைய சங்கங்களுக்கு முன் மாதிரியா யமைகின்றன.

### சைவப் பிரசங்கம்

அராலி தெற்கு ஆறுமுக நாவலர் திருத் தொண்டு சேவா நிலைய ஆதரவில் கொக்குவில சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வெள்ளிக்கிழமை 19-4-57 பிற்பகல் "அருட்குரு' என்னும் பொருள் பற்றி இலவச சைவப் பிரசாரகர் திரு. வே. கந்தையா அவர்களால் ஓர் சிறந்த பிரசங்கம் செய்யப்பெற்றது. சிவஞான சித்தியார் திருமூலர் திருமந்திரம், திருவாசகம், பட்டினத்தடிகள் பாடல் முதலியவற்றிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக் காட்டப் பெற்றன. மும்மலமுடைய சகல வர்க்கத்தைச் சார்ந்த உயிர்கள் மோட்சமடைதற்கு அருட்குருவின் ஞான தீட்சை இன்றியமையாதது என்னும் உண்மையை மேலே குறிப்பிட்ட ஆதாரங்களைக் கொண்டு பிரசாரகர் நன்கு விளக்கினர்.

— கடித.

# திருக்கேதீச்சர மகோற்சவம்

## அடியார் உள்ளங்களுக்கு ஒப்பில்லாப் பேருவகையமைந்தது

—0—

பல்லாயிரம் வருடங்கட்கு முன் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது திருக்கேதீச்சரத் தலம். இடைக் காலத்தில் ஏதோ காரணத்தினால் மங்குதல் அடைந்து அந்நியர் ஆட்சக்குட்பட்டுக்கூடக் கோபுரங்கள் அழிக்கப்பட்டும் ஆலயம இருந்த இடம் தெரியாது பெருங் காடாய், மண்மேடாய்ப் போயிற்று.

இதன்பின் நாடுய்ய நல்வழி காட்ட அவதரித்தவரும், சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல சற்குருநாதசுவாமிகள், இத்தலத்தைப் புநருத்தாரணம் செய்யும் பொருட்டுப் பல சொற்பொழிவுகளைச் செய்து அறிக்கை வெளியிட்

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

டும் வந்தார்கள். பின் இதனைக்கண்டு, இவர் சீடர்களான திரு. சி. த. மு பசுபதிச்செட்டியார் முதலானோர் இப்போதிருக்கும் சிறு ஆலயத்தை நிறுவினார்கள் இவ்வாலயம் சைவப் பொது மக்கள் பலருக்குத் தெரியாதிருந்தது. இதனைப்பெருப்பிக்கக் கருதிச் சைவபரிபாலன சபைத் தலைவர்களான திரு த கைலாசபிள்ளை திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளை முதலானோர் தூண்டுதல் செய்துகொண்டிருந்தார்கள்-இவ்வாறு திருப்பணிச் சபை ஆரம்பமானது—ஆண்டவனுடைய திருவருளை நாம் இன்ப துன்பங்களுக்கூடாகத் தான் காணவேண்டும். அது போலப் பல இன்பதுன்பங்களை அடைந்து வருத்தப் பட்டே நாவலர்காலப் பெரியோர்கள், இன்றைய ஆலயத்தை நிறுவினார்கள் என்பதைச் சைவர்கள் உணர வேண்டும். இப்படியான துன்பங்களை அநுபவித்துக் கட்டிய கோயிலில் புண்ணிய சீலர்களான எப் தமிழகத்தார் அலங்காரத் திருவிழாக்களைக் கண்டு மகிழ்வது பூர்வ புண்ணியப்பேறு என்பதிற் சந்தேகமில்லை.

திருக்கேதீச்சரத் திருவிழா பத்துநாட்களிலும் மாதோட்டத்துச் சைவமக்களும் இலங்கையின் ஏனைய பாகங்களில் வசிக்குஞ் சைவமக்களும் பன்னூற்றுக்கணக்காகத்திரண்டு வந்து, கேதீச்சரநாதர் திருவடிகளை வணங்கினார்கள், அதுவுமல்லாமல் மக்கள் பத்தி சிரத்தையோடு மிக அமைதியோடு அன்புடன் வருவதும் போவதுமான காட்சி நாவலரையா கூறிய தேனிருந்த பொந்தை நாடி வருவதுபோலிருந்தது. இவ்வித அருட் காட்சியைக் காண்பதரிது. இத்தலத் தொண்டிற்குச் சைவக் கல்லூரிகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்ற வேண்டுமெனவும், வட இலங்கைச் சைவப்பெரியார் இப்பணியில் ஈடுபட வேணுமென்றும் அடியேன் நானகாண்டாகக் கருத்திற் கொண்டு, கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் திருவடிகளைச் சிந்தித்ததுண்டு. அச்சிந்தனை இறைவன் திருவருளால் இன்று நிறைவெய்தியது.

இவ்விழாவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய வண்ணை இந்துக் கல்லூரி, வண்ணை மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, தெல்லிப்பளை மகாசனக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, பரமேஸ்வரக்கல்லூரி முதலான தாபனங்கள் பங்குபற்றின. இக் கல்லூரிகளின் மகளிர் முன் மாதிரியாயமையும் முறையில் ஆலய வழிபாடு செய்தமை போற்றுதற்குரியதாகும். இவ்வித விழாவைச் சிறப்புற நடைபெறச் செய்தற்குச் சைவப்பெரியாரின் ஊக்கமே காரணம் எனலாம.

இவ்விழாக்கள் பத்து நாட்களிலும் பிராமணோத்தமர்களாகிய மாவை சிவஸ்ரீ. கு. பாலசந்தரக்குருக்கள், சிவஸ்ரீ. சிவசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ பொன்னுச்சாமிக் குருக்கள், சிவஸ்ரீ. சீதாராம அய்யா சைவக்குரு, சிவஸ்ரீ. சுப்பிரமணியதேசிகர் முதலானோர்களும் திரு. க. நவரத்தினம், திரு. த குமாரசாமிப் பிள்ளை, திரு. மு. மயில்வாகனம், திரு அருளம்பலம், திரு. அம்பலவாணர், திரு. நவரத்தினம், திரு. செ. சின்னத்துரை, திரு. சி. சுவாமிநாதன், திரு பொ. அப்புக்குட்டி, திரு. தில்லைநாத முதலியார், திரு. வே. சங்கரப்பிள்ளை, திரு. மு. ஞானப்பிர

தொடர்ச்சி 5ம் பக்கம

# வாழ்க்கை வானில்

— வானமதி

## வைகாசி முதல் நாள் வசதியாய் வந்தது

இடதுசாரிகளைத் தங்களுடன் இரண்டறக் கலக்கச் செய்வதற்காகும் 'அந்த நாள் வந்திடாதோ' என்று அவாவிக் கொண்டிருந்த ம. ஐ. முன்னணிக்கு வைகாசி முதலாம் நாள் வசதியாய் வந்ததே! இந்த நாளை விடுமுறை நாளாகக் கொண்டு வந்த அரசாங்கத்தை விட 'இடது' மனப்பான்மையுள்ள அரசாங்கம் எது இருக்கின்றது என்று தொழிலாளர்கள் விவசாயிகள் எண்ணும்படி மந்திரி இலங்கரததின பாடுபட்டுழைத்துப் பயனும் பெற்றுவிட்டார். இனிமேல் இடதுசாரிக் கட்சிகளிடம் இருந்து இடையூறு எய்த மாட்டாது என்ற வகையிலே ம. ஐ. முன்னணியார் வைகாசி முதலாம் நாள் வைபவத்தில் மனத்தைரியங் கொண்டுவிட்டனர்.

x x x

### அரசாங்க சேவையாளர்க்கு எச்சரிக்கை கலந்த அன்புரை

அரசாங்க சேவையாளருக்குப் பரிபூரண அரசியல் உரித்தும் அளிக்கப்படல் வேண்டுமென்பது தான் ம. ஐ. முன்னணியின் கொள்கையாம். ஆனல் ஒரு அளவுக்குச் சில கட்டுப்பாடுகளுக்கும் அரசாங்க சேவையாளர்கள் கட்டுப்பட வேண்டும் என்பதையும் நிதி மந்திரியார் காட்டியிருக்கின்றார். அரசாங்கததுக்கு அமைவாய்ப் பணிவாய் ஆதரவாய் இருப்பதுதான் அந்த நிபந்தனை. விளக்கமாய்க் கூறுகில ம. ஐ. முன்னணி ஆதரவாளர்களாய் இருத்தல் வேண்டும் என்பதே. ஐ. தே. கட்சி ஆண்டுவரும்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## ஸ்ரீ அரியநாயகத்துடன் தமிழ்த் தலைவர்கள் ஆலோசனை

வியாழக்கிழமை 2-5-57 காலை 9 மணிக்கு யாழ்ப்பாண நகரமண்டபத்தில் காந்தி அடிகளின் வார்தா கல்வித் திட்டத்தைக் கையாளும் ஸ்ரீ இ. டபிள்யு அரியநாயகம் அவர்களை தமிழ்த்தலைவர்கள் சந்தித்து நாட்டுநிலைமைபற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் இணையற்ற தொண்டு

## எம்நாட்டு மக்கள் அறிந்துவாழ்தல் இன்று வேண்டப்படும்

திரு. ஆ கந்தசாமி
நடுத்தெரு - காரைநகர்

சுவாமி விவேகானந்தர் பாரதநாட்டில் வாழ்ந்த பெரியார்களுள் ஒருவர். இந்துமதம் வலி குன்றித் தள்ளாடி நிற்பதைக் கண்டு மனம் பதைத்து அதற்குப் புத்துயிர் அளித்தார். அவர் செய்த மகத்தான சேவையினுல் இந்து சமயிகள் இன்று பிற சமயத்தைச் சேர்ந்தவர்களுடன் கொலுவீற்றிருக்கின்றனர். அவர் உலகத்தைத் துறந்த சன்னியாசியாக வாழ்ந்தும் அதையே போதித்த போதும் சாதாரண வாழ்க்கையில் மக்கள் படும் இன்னல்களை மறந்துவிடவில்லை. அவர் அக்கஷ்டங்களை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

தாமே இந்த வாழ்க்கையில் ஈடுபட்டவர் போன்று அவர்களுடைய வாழ்க்கையை விவரமாக அறிந்திருந்தார். யார் எவரேனும் தன்னிலே பூரண நம்பிக்கையும் திடகாத்திரமும் உடையவராய் இருந்தால் தான் செய்யத் துணிந்த கருமத்தில் வெற்றி பெறலாம் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தினுர். 'நீ ஒரு தனவந்தனுய் வர ஆசைப்பட்டால் அந்த வழியில் முயற்சி செய். நீ வெற்றி அடைவாய். அல்லது நீ ஒரு அறிஞராக வர விரும்பினுல் அந்தத் துறையில் வேலை செய். நீ அப்படியாக வருவாய். சமயத்தோடு மாத்திரம் நில்லாது அரசியல் விடயங்களிலும் ஊக்கம் காட்டினுர். தேச அபிமானம் உடையவராகவும் திகழ்ந்தார்.

அவர் வாழ்க்கையில் பிரதான அம்சம் என்ன? உலகத்தைத் துறந்த சன்னியாசியாகவே தம் வாழ்நாளைக் கழித்தார். நாம் எல்லோரும் இவ்வுலகத்தைத் துறந்து சன்னியாசிகளாக இருந்தாலே நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யமுடியும். பலர் உடுக்க உடையின்றி அலைகிருர்கள். சிலர் இருக்க வீடும் நிலமும் அற்று அலைகின்ருர்கள். சிலர் அறியாமை என்னும் பிசாசினுல் உந்தப்பட்டுக் கொடூரச் செயல்களைச் செய்கின்ருர்கள். இந்தச் சூழ்நிலையில் உலக வாழ்க்கையில் ஈடுபடுவது சரியல்ல; நிரந்தரமாகச் சுபீட்சம் என்று சொல்லக்கூடிய நிலையை அடைவதற்கு நாம் எங்கள் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலையை அடைவதற்கே சுவாமி விவேகானந்தர் அடிகோலினுர். ஆதனுல் துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். இந்த வாழ்க்கையில் இருந்தால்தான் தம் பணியைச் செவ்வனே செய்ய முடியும் என்பதை உணர்ந்தார். மற்றவர்களும் துறவற வாழ்க்கையில் ஈடுபட ஆவன செய்தார்.

அவர் ஒரு துறவியாக இருந்துகொண்டு என்ன செய்ய முயற்சித்தார்?



[விவேகானந்தசுவாமிகள்]

இந்து மதத்தில் அளவிலா அன்பு கொண்டிருந்தார். சமயத்திலே உள்ள பற்றை மக்கள் கைவிடுவதைக் கவனித்தார். இராமகிருஷ்ண பரமகம்சரின் உத்தம சீடராதலினுல் அவர் போதனைகளையும் கொள்கைகளையும் எடுத்து உரைத்தார். ஆண்டவன் எங்கும் வியாபித்து இருக்கிருர். 'நீ கடவுளைக் காண விரும்பினுல் ஒவ்வொரு மனிதனிலும் கடவுளைப் பார்' என்று இராமகிருஷ்ணர் கூறியதை அவரும் விளக்கினுர் ஆனுல் சுவாமியவர்களின் மகத்துவம் எங்கே அமைந்திருக்கின்றது அவர் எந்தத் துறையிலே தம்முயற்சியை அதி தீவிரமாகச் செலுத்தினுர்? வேதாந்தத்தை மக்கள் விளங்கவேண்டும். அதையே அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கையை நடாத்த வேண்டும் என்று பேரவாக் கொண்டார். இந்துசமயத்திற்கு உயிர் நாடியாகவுள்ள உபநிடதங்களையும் அவற்றில் விளக்கப்படும் அத்துவிதத்தையும் மக்கள் கற்றுக் கொள்ள வழிவகுத்தார். இந்து என்ற சொல்லுக்கு பொருள்வேதாந்தி என்றே கருதினுர். மக்கள் சுயநலக் கிருமிகளாகவும் இலௌகீக வாழ்க்கையில் மயங்கித் தம் கடமைகளை மறந்து திரிவதையும் கண்டார். இதைக் கண்டு ஆத்மாவோடு சம்பந்தப்பட்[...]

னலமற்ற ஒரு தெய்வீக வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்ட வேதாந்தத்தை மக்கள் முன்னிலையில் எடுத்துப் போதித்தார். இந்தியா, இந்தத் திசையிலேதான் முன்னேறிச் செல்ல வேண்டுமென்று விரும்பினுர்.

இந்துசமயிகள் உபநிடதங்களைக் காக்க விருப்பமில்லாது இருப்பதைக் கண்டு வருந்தினுர். கிறிஸ்தவர்களுக்கு 'பைபிள்' எவ்வாறு வேதநூலாக அமைந்திருக்கிறதோ, அதே போன்று உபநிடதங்களும் சைவசமயிகளுக்கு வேதமாக அமைந்திருக்கின்றது என்பதை இந்திய மக்களுக்கு எடுத்துரைத்து, அவர்கள் இருளை நீக்கினுர். சுவாமியவர்கள் இந்திய நாட்டுமக்கள் பெலன் குன்றி, பொருள் அற்று, பொருமை, வறுமை ஒற்றுமையின்மை முதலிய நோய்களினுல் ஆற்றல் கெட்டு, தங்களுக்கும் தங்கள் நாட்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை

**தெல்லிப்பழை பாலர் ஞானேதயசபை**

ஷை விழா சித்திரைமீ 14உ 25-4-57) வியாழக்கிழமை பிற்பகல் பாலர் ஞானேதய சபை மாணவர் கூடால் காசிவிநாயகர் ஆலயமண்டபத்தில் நடேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. சு. சிவவாகீசர் B.A அவர்கள் தலைமையில் சிறப்பாகச்செய்யப் பெற்றது. ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கும் நாவுக்கரசரின் திருவுருவப் படத்திற்கும் விசேட பூசைகள் நடைபெற்றபின் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. அதன் பின் கூட்டம் ஆரம்பமாயது. மாணவர்கள் ஒன்றுகூடி, இச் சபையை வளர்த்து இதுபோன்ற விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்றும் தாம் தம்மாலான ஆதரவைத் தருவதாகவும் தலைவர் தமது தலைமைஉரையிற் குறிப்பிட்டார்கள். திருமதி கனகராயர் அவர்கள் பேசுகையில் நாமெல்லாம் தமிழினம் என்பதையும் நமது தாய் மொழி தமிழ் என்பதையும் ஒரு போதும் மறக்கக் கூடாதென்றும் திருநாவுக்கரசர் போன்ற பெரியார்களது வாழ்க்கையை சிறுவர்கள் பின்பற்றப் பழக வேண்டுமென்று குறிப்பிட்டார்.

கொழும்பு - சர்வகலாசாலை மாணவன் திரு. த. பூ. முருகையா அவர்கள் பேசுகையில் தாம் மாணவனுக இருந்தகாலத்தில் இச் சபையில் கற்ற கல்வியே இன்றும் தமக்குத் துணை செய்வதாகவும் மாணவர்கள் இச் சபையை வளர்க்க வேண்டுமென்றும்கூறினுர். ஆசிரியர் திரு. இ. சிவானந்தம் அவர்கள் பேசுகையில் இன்று தெல்லிப்பழையில் சிறந்த ஸ்தாபனமாக விளங்குவது இச்சபையேயென்றும் திருநாவுக்கரசுநாயனுரை வழிபட்டே ஓர் அடியார் முத்திபெற்றனரென்ருல் அவரது பெருமை அளவிடற் கரியதென்றும் குறிப்பிட்டார். கூட்டம் 6 மணியளவில் நிறைவுற்றது.

**வெளிநாட்டுக் கருமமொழி?**

வெளிநாடுகளுடன் தொடர்பான கருமங்கள் சிங்கள மொழியிலேயே செய்யப்படுமென்னும் தீர்மானத்தை அரசாங்கம்தெளிவு படுத்தியிருக்கின்றது.

## மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

### பெரியபுராண வசனம்

**திருநாவுக்கரசு நாயனுர் புராணம் III**

**கங்கையும் யமுனையும் கண்டு கலந்தன**

பின்னர்த் திருநெய்த்தானம் திருமழபாடி முதலாந் தலங்களை வணங்கிக் கொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்தார். பாண்டிநாட்டிலே சமணரை வென்று - சைவத்தைத் தாபித்துப் பாண்டியன் கூனையும் நிமிர்த்திய சம்பந்தர், அப்பர் அங்கு இருப்பதை அறிந்து சென்ருர். அப்பரும் சம்பந்தர் வரவறிந்து மகிழ்ச்சியுடன்எதிர் கொண்டார்.

அடியார் நெருக்கம் அதிகம். அப்பர் ஆளோடு ஆளாகச் சேர்ந்து சம்பந்தருடைய சிவிகையைத் தாங்கி வந்தார். திருப்பூந்துருத்தி கிட்டியதும் "அப்பர் எங்குற்ருர்" என்ருர் சம்பந்தர். "அடியேன் தேவரீரைத் தாங்கும் பெருவாழ்வைப் பெற்று இங்குற்றேன்" என்ருர் அப்பர். பதைபதைத்தார் சம்பந்தர். சிவிகையினின்று குதித்தார். மனப் பதைப்புடனே அப்பரை வணங்கினுர். அப்பரும் அப்படிச் செய்தார். அடியார்களும் வணங்கினர். கங்கையும் யமுனையும்போல இருவருங் கலந்து - திருப்பூந்துருந்தியையடைந்து — கடந்தகால அற்புதங்களையிட்டுப் பேசிக்கொண்டு இருந்தனர்.

**கல்லும் பொன்னுஞ் சமனுகக் காணுதல்**

சில நாட்களில் சம்பந்தர் தொண்டை நாட்டு யாத்திரைக்குப் புறப்பட, வாகீசர் பாண்டிநாட்டுக்கு மதுரைக்குச் சென்ருர். அங்கு கூன் நிமிர்ந்த பாண்டியனும் — தேவியும் குலச்சிறையும் வணங்கி உபசரித்தனர். அவர்களிடத்து விடைபெற்றுச் சோழ மண்டலத்தையடைந்து திருப்புகலூரில் உழவாரத்தொண்டு புரிந்து கொண்டிருந்தார். ஒரு அதிசயமான சம்பவம் நடைபெற்றது. உழவாரம் புகுந்த இடமெங்கும் நவரத்தினங்கள் பிரகாசித்தன. அவற்றைப் பருக்கைக் கற்களாக எண்ணினுர் அப்பர். ஓடும் பொன்னும் ஒன்ருகக் கருதுவர் உண்மையடியார்கள். அங்ஙனமே நவரத்தினங்களைப் பருக்கைக் கற்களாகக் கருதினுர் வாகீசர். அவர், வீதி வலம் வரும் அடியார்திருவடிகளை அவை உறுத்துமென்று எண்ணி, உழவாரத்தினுலே ஏந்திக் (கையினுலே தொடக்கூட நாடவில்லை அவர்மனம்) குளத்திலே எறிந்துவிட்டார். (உங்களுக்கு இப்படியொரு சந்தர்ப்பங் கிடைத்தால் கற்கள் குளத்திலாபோகும்! இரும்புப் பெட்டகத்தின் உள்ளே போய் மறைந்திருக்கும்.)

**உங்களாலே ஆட்டுண்ணேன் நான்**

அப்பர் பெருமையை உலகமறியக் காட்ட விரும்பி இறைவன் செய்த திருவிளையாட்டுக்களில் இது ஒன்று. இன்னும் ஒரு விளையாட்டுப் பாருங்கள். வானிள மங்கையர் சுவர்க்கத்தினின்றும் இறங்கி வந்தனர். அரம்பையர்கள் என்பது இவர்களைத்தான். தேவிலோக நடனமாதர் எனப்படுவார்கள். இறங்கி வந்தனர். இசைபாடினர். கூத்தாடினர். பூமாரி பொழிந்தனர். கண்ணெளிவீசினர். வாகீசரை அணைபவர்கள்போல, அணைப்பவர்கள் போலப் பாசாங்குபண்ணினர். கூந்தல் குலைய இடை அசைய- ஓடித் - திரும்பி உடைகளை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பரம்பரை ஓர் தனிப்பரம்பரை

## ஒப்புயர்வில்லாப் பெருமையுடையது அகத்துறைப்பிரிவு

தமிழ் இலக்கியப் பரம்பரை வடமொழியினின்றும் வேறுபட்ட ஒருதனிப் பரம்பரையேயாகும் என்று சங்க இலக்கியங்களைத் துருவிப் பார்ப்பவர்களுக்குப் புலனுகும்

திராவிடத்தின் எத்துறையை ஆராய்ந்தாலும் அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. திராவிட மொழி நூல் ஆராய்ச்சி தொடங்கி நூறு ஆண்டு காலம் ஆகிவிட்டது. திராவிட மொழிகளுக்கெல்லாம் தாயாக வடமொழியைக் கருதி வந்த காலம் மலையேறிவிட்டது. ஆரிய மொழி. தென்னிந்திய மொழியின் மீது தன் செல்வாக்கை நாட்டமுயன்றது உண்மைதான். அதே நேரத்தில் திராவிட மொழியும் ஆரியத்தைப் புதுப்பிக்கத் தொடங்கியது என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும். எனவே திராவிட மொழி வரலாற்றையோ, ஆரியமொழி வரலாற்றையோ எழுதுகின்றவர்கள் இரண்டும் தனித்தனியே எத்தகையதொடர்புமின்றி இருந்தன என்று கூறமுடியாது.

வடமொழியே உலக மொழிகளுக்கெல்லாம் மூலத்தாய்என்றும் அதுவே முழுமையடைந்த மொழியென்றும் கருதுவது தவறு.

இந்திய நாட்டின் எல்லா வகை மொழிகளிலுமுள்ள இலக்கியங்களையும் காணும்போது அதிலே ஒரு பொதுமை காணப்படுகின்றது. நான் முதன் முதலில் தமிழில் உள்ள சங்க இலக்கியங்களைப் படிக்கும்போது அதில் உள்ள புதுமை கண்டு வியந்தேன். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சமூகச் சூழ்நிலை இராமாயண மாபாரதங்களிலும் புராணங்களிலும், மற்றுமுள்ள வடமொழி இலக்கியங்களிலும் காணப்படாததொரு புதுவகைச்சூழ்நிலையாகும். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வாழ்க்கைத் தத்துவம் இந்திய இலக்கியங்கள் அனைத்திலும் பெருமை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. தமிழர் அகத்துறையை களவு, கற்பு என்று இருவகையாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தப்பிரிவினை வடமொழி இலக்கியப் பரம்பரைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். தொல்காப்பியத்தில் காணப்படும் அகத்துறை வருணனையெல்லாம் எனக்கு மிக மிகப் புதுமையுடையவையாகத் தோன்றின. தமிழர் தம் அகத்துறையில் நிலத்தையும், பொழுதையும், கருப் பொருளையும் உரிப் பொருளையும் பிரித்தவிதம் அவர்களுக்கே உரிய தனிமுறையாகும். இந்தப் புதுமையைக் கண்டு நான் வியந்தேன்! 1500 அல்லது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் நிச்சயமாக மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபட்டதாகவே இருந்தாகவேண்டும். தமிழ் இலக்கியங்களில் வடமொழிச் சொற்களும் கருத்துக்களும் மிகக் குறைந்த அளவிலேயே அமைந்துள்ளன என்று கூறப்படுகிறது. எனவே தமிழ்ப் பரம்பரை வடமொழியினின்றும் வேறுபட்ட ஒரு தனிப் பரம்பரையே என்பது எனது முடிவான கருத்து என்று வடமொழிச் சீர்திருத்தக் குழுத் தலைவர் கலாநிதி சுனிதிகுமார் சட்டர்ஜி அவர்கள் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிநூல் துறையைத் தொடக்கி வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

---

### திருக்கடவூரில் திருமுறை விழா

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவர சுவாமி தேவஸ்தானம் திருமுறை வகுப்பு ஆண்டு விழா சென்னை விவசாய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் சென்ற ஞாயிற்றுக் கிழமை (24-4-57) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோயிலில் சலவைக் கல்லில் பொறிக்கப்பெற்றுள்ள திருப்பதிகம் அபிராமி அந்தாதி எழுத்துக்கள் அன்று இரவு திறந்து வைக்கப்பெற்றன.

கலாநிதி ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

---

### நியாயமான அளவுபற்றி முதல்மந்திரி விளக்கம்

கல்வி, அரசாங்க சேவை, கடிதப் போக்குவரத்து, தலதாபன நிர்வாகம், வாக்காளர் இடாப்பு ஆகியவற்றில் தமிழ்மொழிக்கு இடமுண்டு. அரசாங்க மொழியான சிங்களம் தெரியாது என்ற காரணத்தால் சிங்களம் தெரியாத இந் நாட்டுப் பிரசை எவராவது பாதிக்கப்படக் கூடாது. தமிழ் மொழிக்கு நியாயமான அளவு அங்கிகாரம் அளிக்க நாம் எண்ணியுள்ளோம் என்பது தமிழ் மொழியின் நியாயமான அளவு உபயோகம் என்பதுபற்றி முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக கொடுக்கும் விளக்கத்தின் சாரம்.

---

### அகில காரைநகர் விளையாட்டுப் போட்டி

காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஆதரவில் காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் சித்திரை 7-ம், 8-ம் திகதிகளில் (19—20-4-57) அகில காரைநகர் விளையாட்டுப் போட்டி ஒன்று தந்தி தொலைபேசிப் பகுதி அதிகாரி திரு. ச. இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல திறப்பட்ட விளையாட்டுக்கள் நடைபெற்று அவற்றில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

---


### காணி விற்பனவு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் கல்லூரி (பழைய வைத்தியசாலை) எதிரேயுள்ள 4¾ பரப்பு நிலமும், 6 அறைகள் உள்ள வீடும் விற்பனைக்கு இருக்கிறது. நல்ல விலைக்கோரிக்கை கவனிக்கப்படும், சி. வீரசிங்கம், 20 டுப்ளிக்கேஷன் ரோட், கொள்பிட்டி.

M 9 26-4, 3-5, 10-5


---

## மாணுக்கர் மதி வள மன்றம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

அசைத்துக் காட்டினர். உழவாரத் தொண்டுபுரிந்த இடமெல்லாம் மாய வேடங்கள் தாங்கி நடித்தனர். எத்தனையோ மோகினி விளையாட்டுக்களையெல்லாம் விட்டுப் பதம் பார்த்தனர். சித்தஞ் சிறிதுஞ் சிதறினரில்லை அப்பர். உரனென்னுந் தோட்டியால் ஐம்பொறிகளையுங் காத்தார். அவ்வளவு உறுதி அவருக்கு. சொன்னர் அவர்களைப் பார்த்து; "நான் திருவாரூர்ச் சுவாமிக்கு ஆளானேன்; உங்களாலே ஆட்டுண்ணேன்; என்னையலையன்மின்" என்றும்; 'வசதியுள்ள வேறிடத்தைப் பாருங்கள்' என்னுங் கருத்தமையவும் "பொய்ம்மாயப் பெருங் கடலிற் புலம்பா நின்ற, புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்களிம் மாயப் பெருங்கடலையரித்துத் தின்பீர்க..." என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடியருளினர். அரம்பையர்கள் தங்கள் கருத்து முற்ருமையால் அவரை வணங்கிப் பின்வாங்கிக் கொண்டு போய் விட்டனர். இந்த நிலைமையைச் சகல உலகத்தார்களும் அறிந்து அப்பரைத் துதிக்கலுற்றனர்.

#### எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனே

வாகீசர், புகலூரர் எனக்கு இனிப் புகலளிப்பார் - சேவடிக்கீழ் இருத்திடுவார் என உறுதி கொண்டார். பூர்வ ஞானேதய உணர்ச்சியினுல உந்தப்பட்ட நாவுக்கரசர்; ஞானத் திருவிருத்தங்கள் பலவும் பொழிந்தார். இங்ஙனமாக ஒரு சித்திரை மாசத்திலே சதய நட்சத்திரத்திலே,

"எண்ணுகே னேன் சொல்லி
யெண்ணு கேனே
எம்பெருமான் திருவடியை
எண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர்
களைகணில்லேன்
கழலடியே கைதொழுது
காணி னல்லால்
ஒண்ணுளே யோன்பது
வாசல் வைத்தாய்
ஒக்க வடைக்கும்போ
துணர மாட்டேன்
புண்ணியனே யுன்னடிக்கே
போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய
புண்ணியனே".

"உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னுந் திருத்தாண்டத்தைப்பாடிச் சிவனுடைய திருவடியையடைந்தார்.

#### படிப்பனை

திருநாவுக்கரசு நாயனர் புராணம் முற்றுபெற்றது', இனி, இப் புராணத்தின் மூலமாக நாம் கற்றுக் கொள்ளக் கூடியன எவை என்பதை நோக்குவாம். திலகவதியார் நாவுக்கரசரின் சகோதரி. இவர் கலிப்பகையாருக்கு விவாகம் பேசப்பட்டவர். கலிப்பகையார் வட தேசப் போரில் இறந்து விட்டார். பெற்றோர் கலிப்பகையாருக்குத் தம்மைக்கொடுக்க இசைந்த ஒன்றினலே - மணம் நிகழ்ந்து விட்டதாகக் கருதினர் திலகவதியார். ஆதலின் தம்முயிர் அவருக்கேயுரியது என நினைத்தார். பெண்ணுரிமையென்று கூறி, ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்று வீறு பேசிப் பெண்டன்மையை மறந்து நாற்குணங்களையுந் துறந்து நகரங்களில் பறந்து திரியும் இக்கால நாரீமணிகளுக்கு முந்தையோர் கண்ட கொண்ட முறைகளை யெடுத்துக் காட்டுந் திலகவதியார் ஒரு எடுத்துக்காட்டு. உதாரணம். இனித் தவஞ் செய்யும் போது மனம் மொழி மெய் இவற்றைப் பிறிதொன்றின்கட் செலுத்தாமலும்; அவற்றினுற் குற்றஞ் செய்யாமலும் இருத்தல் வேண்டும். நாவுக்கரசர் பூர்வத்திற் தவம்புரியும் பொழுது சிறிது வழுவி விட்டார். அதுவே அவர் சமணத்திற் சேரவும் - இறைவன் சூலையைக்கொடுத்து ஆட்கொள்ளவுங் காரணமாயிற்று. இன்னும்;

இறைவன்வழி நிற்கும் உண்மை யடியார்களுக்கு இடர்கள் வரினும் அஞ்சார் என்பதும் - எவ்வகை இடர்களும் அவர்களைத் தாக்காவென்பதும் - முடிவில் யாவும் இன்பமேயாகும். ஒரு பொல்லாப்பு மில்லை என்பதும்; அமணர் புரிந்த மலைபோன்ற தீச் செயல்கள் யாவும் பனிபோல அகன்றமையாலும் அப்பரை அவை தாக்காதொழிந்தமையாலும் பெறப்படும். "நாமார்க்குங் குடியல்லேம்" என்றபடி வீர சுதந்திர உணர்ச்சியையும்- நடலையில்லாத நற் பெருவாழ்வையும் எய்தப்பெற்றவர் நாவுக்கரசர். அவருக்குத் திருவருள் பாலித்த தன்மை-ஓட்டையும் செம்பொன்னையும் அவர் ஒன்ருகக் கருதியமை - அரம்பையர்கள் மாயவலையில் சித்தங் கலங்காமை - இறைவன் தமது திருகோலத்தைக் காட்டித் திருவடிக்கீழ் அவரை ஆட்கொண்டமை என்பனவும் பிறவும் மனத்தில் இருத்தவேண்டியன.

#### பொருட் டொகுப்பு

மேலும் உபயோகமாகும் பொருட்டு இப்புராணத்தின் பொருட்டொகுப்பைச் சுருக்கித் தொகுத்துக்கூறுவேன். கவனியுங்கள்.

மருணீக்கியார் தருமசேனரானமை. திலகவதியார் திருவதிகை வீரட்டானத்திலே திருத்தொண்டு புரிந்தமை. திலகவதியார் தம்பியாரைப் பரசமயப் படுகுழியினின்றும் மீட்டமை. மருணீக்கியார் நாவுக்கரசரானமை. சமணர்களிட்ட நீற்றறையினின்றும் பிழைத்தமை. நஞ்சு கலந்த சோறு அமுதமானமை. அமணர்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

---

### திருக்கடவூரிற் சைவ சித்தாந்தமாநாடு

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவர ஸோமி தேவஸ்தாவத்தில் 17-4-57 தொடக்கம் ஐந்து நாட்கள் சைவ சித்தாந்த மநாடு தொடர்ந்து நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) முதலிய பெரியோர் தலைமைதாங்கப் பல்துறைப் பேரறிஞர்கள் நாள்தோறும் சிறந்தசொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

### நாடற்றவர் இடைக்காலப் பிரித்தானியராவாராம்

—0—

இலங்கை இந்திய பிரசா உரிமைகளைப் பெருத இலங்கை இந்தியருக்குப் பிரித்தானியபிரசாஉரிமை கொடுக்கப்படுமாம். அவர்களின் நிலையான நிலைமை தீர்மானிக்கும் வரையும் அது ஓர் இடைக்கால ஒழுங்காகச் செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## தூதுக் குழு வருமா ?

தனிச் சிங்களச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்திலே கொணரப்பட்ட நாள் தொடங்கி சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே எண்ணற்ற அபிப்பிராய பேதங்களும் – வகுப்புவாதக் கூச்சல்களும் – அறப்போர்க்குரல்களும் எழுந்து நாட்டின் நற் பெயருக்கு இழுக்கை ஏற்படுத்துவதுடன் சமூக அமைதிக்கே பேராபத்தினை யுண்டாக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி வரும் இந்நாட்களிலே "தனிச் சிங்களச் சட்டம்" நீதியானது என்பதைத் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து, பிரசார மூலம் விளக்கி வைக்க, ஒரு இலட்சம் தொண்டர்களைத் திரட்டவும் – வடக்கு கிழக்கு மாகாணங்களில் விசேடமாகப் பிரசாரம் செய்யவும் ஒரு (சிங்கள) குழு அண்மையிலே உத்தேசித்திருப்பது வரவேற்கத் தகுந்ததாகும். ஆனல் மேற்படி தூதுக்குழு தமிழ் கற்றுவிட்டு, இங்கு வந்து தமிழர்க்கு, தமிழ்மொழியிற் பிரசாரம் செய்வது விரும்பத் தக்கதென்றும், தமிழராயுள்ளோர் தங்கள் தாய் மொழியில் – தங் குறைகளை எடுத்துக் காட்ட வாய்ப்பு ஏற்பட முடியுமென்றும் அப்படித் தமிழ்கற்று வரும் தூதுக்குழுவுக்கு எங்கள் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதனல் அவர்களை நாங்கள் மனம் மாறச்செய்தலும் ஆகும்என்றும் வரவிருக்கும் தூதுக் குழுவை வரவேறகத் தக்கதான நியாயத்தினை முன் கூட்டியே பெரியார் ஒருவர் வெளியிட்டது விரும்பத் தக்கதொன்றேபாகும். இக் கருத்தினை இச் சந்தர்ப்பத்தில் வெளியிட்ட பெருமை கொக்குவில் இந்துக் கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. H. பேரின்பநாயகம் அவர்களையே சார்ந்ததாகும். பிரசார சபைக்கு எடுத்துக் காட்டும் பிரதான விடயங்களுள் ஒருசிலவற்றை இத் தருணத்திலே ஞாபகப்படுத்துவது முறையாகும். அவற்றுள் ஒன்று ஈழத்துக்கு வரும் பிறநாட்டுப் பிரதமர்கள் விருந்தாளிகள் பெரியார்கள் தென் இலங்கையை மட்டும் தரிசித்துச் சென்றுவிடுகின்றுர்கள், வட இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அத்தகைய பெருமக்களது பாதங்கள் படிவதில்லை. இதுபோன்ற எண்ணற்ற குறைகள் பல வருடங்களாக இருந்துவருகின்றனவே! இவற்றை வரவிருக்கும் தூதுக்குழு அறியமாட்டாதா? ஏன்? இன்னும் சில வாரங்களுள் பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு அவர்கள் ஈழத்துக்கு வரவிருக்கின்றுரே — அவரை வட இலங்கை மக்களும் ஒரு முறை வரவேற்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுமா? இதுபோன்ற பல விடயங்களில் (நியாயமான அளவு) இடம் பெறுது வருத்தமுற்றிருக்கும் ஒரு இனத்துக்குக் குறித்த தூதுக் குழுவினர் பிரசாரத்தால் திருப்தி ஏற்படுமென்று எண்ணுவது புத்தியாகுமா......?

கா. இரகுநாதன்

நாயன்மார்கட்டு.
யாழ்ப்பாணம், 1-5-57.

## கதிரவேற்பிள்ளை பற்றித் திருத்தம்

1௧ – 4 – 57 ல் வெளிவந்த இந்துசாதனத்தில் நா. கதிரைவேற்பிள்ளையைப்பற்றி எழுதிய வாழ்க்கைக் கட்டுரையைக் கண்டேன். அதில் சில பிழைகள் நேர்ந்தமைக்கு வருந்தி அவற்றை நீக்க இக் கடிதம எழுதலானேன். அவர் பெயர் நா. கதிரைவேற்பிள்ளையே; கதிரவேற்பிள்ளையன்று. அவர் பெற்ற பட்டம் சதாவதானமேயன்றி தசாவதானமன்று. அவர் பிறந்தவருடம் 1874 என்பர். ஆதலால் அவர் 97 வருடங்களுக்கு முன்னர் பிறந்தனர் என்பது பெருந்தவறு. 1939ல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தைப் பார்க்கவும்

50 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் பிள்ளையவர்கள் சைவ சித்தாந்த சரபமாய் வளங்கியவராதலால் அவரை யான் நன்கறிவேன். ஆகலின் அவரது சரித்திரம் தவறுபடுவதை நீக்கக் கடமையாகக் கொண்டேன்.

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை
திருமயிலை
21—4—57.

## கிருக்கேதீச்சர மகோற்சவம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

காசம் முதலானோர் களும் சொற்பொழிவாற்றியுள்ளார்கள். இன்னும் அம்பாள் சந்நிதியில் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணபடனம் நடைபெற்றது இதில் திரு. குமாரசாமிப்பிள்ளை, திரு மு. ஞானப்பிரகாசம், திரு. பொ. அப்புக்குட்டி முதலானோர் பங்குபற்றியுள்ளார்கள். பல மக்கள் பக்தி சிரத்தையோடு கேட்டனர்.

திரு. பொ. கருணாகரர், திரு. செ. கோவிந்தசாமி, திரு. இ. சிவாங்சோதி, திரு. திருநாவுக்கரசு, மாணவன் திரு தம்பையா. திரு பாண்டியனுர் முதலான திருத்தொண்டர்கள் ஆலயத் திருத்தொண்டுகளில் பங்குபற்றினர். சுவாமி வீதிவலம் வந்தபோது சிவநாமத் திருப்பாடலகள் இன்னிசையுடன் பாடப்பெற்றன. இவ்வித சேவைச் சிறப்புக்களை யெல்லாம் திருப்பணிச் சபைத் தலைவரான சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் போற்றித் துதித்துச் சகலருக்கும் நன்றிகூறி எம்பெருமான் திருவடிகளை வாழ்த்தினர்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 5—5—57 —— 11—5—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

தொடர்ந்து சிறிது காலத்துக்குத் தேகசுகம் நல்லாயில்லாமலிருக்கும். ஆனல் பணத்துறையில் ஒரு நல்லவாரம், இனத்தவர்களும் நண்பரும், அதிகஉதவியாயிருப்பர் புகழும் சமூக சித்தியும் நிச்சயம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

இனத்தவர்களுடனும் நண்பருடனும்சண்டைகளுக்கிடமுள.வேலைகள் கூடுதலாயிருக்கும். வரவு செலவைச் சமாளிக்கமாட்டாது நீர் வருந்துவீர். இரகசியப் பகைவரால் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

மனச் சமாதான மிருக்கமாட்டாது. தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. நீர் அளவுக்குக் கூடியவேலை சுமத்தப்படுவீர். பணத் துறையில் நல்ல வாரம், ஆனல், நீர் அதிகம் மிச்சம்பண்ணமாட்டீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

தனலாபம் நிச்சயம். நீர் எதிர்ப்பை நீக்கக்கூடியதா யிருக்கும். புகழும் புதுமுயற்சிகளிற் சித்தியுக் நிச்சயம். ஆனல் தேகசுகம் அதிகம் நல்லா யிருக்கமாட்டாது.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,**

உம்முடைய மனம் அமைதியாயிருக்கமாட்டாது. இனத்தவர்களுடனும் நண்பர்களுடனும் சண்டைகளுக்கிடமுண்டு. தாயாருக்குச் சுகவீனத்துக்கும் சில அபாயங்களுக்கும் இடமில்லாமலில்லை.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உம்முடைய கருமங்களில் இந்தவாரம் நீர்சில எதிர்ப்புகளை முன்னிடவேண்டிவரும். இழிமொழி பரப்புவோரும் இடைஞ்சல்களுண்டாக்குவோரும் உமக்கு அதிகம் கோபமூட்டுவர், பணத்துறையிலும் மிகுந்த செலவுள்ள வாரம். உம்முடைய தேக சுகத்தைப்பற்றிக் கவனமாயிருக்கவும்,

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

பணத்துறையில் நல்ல வாரம், உத்தியோக சித்தியும் நிச்சயம். இனத்தவர்கள் சண்டை தொடுப்பார்கள், நண்பருடன் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. வார இறுதியில் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

வாரத்தின் முதல் நாளைக் கவனமாய்க் கழிக்கவும். கடும் சுகவீனங்களுக்கு அல்லது சிறு அபாயங்களுக்கிடமுண்டு. நடைமுறைகளிற் சில மாற்றங்களுக்கு மிடமுண்டு. பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,**

ஞாயிறு இரவு திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், ஆனல் தேகசுகம் இன்னமும் சிக்கலாயேயிருக்கின்றது. குடும்பக் குழப்பங்களுக்கு இடமில்லாமலில்லை,

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

முதல் அரைவாரத்தில் உம்முடைய கருமங்களை நீர் இலகுவாக ஒழுங்குபண்ணக்கூடியதா யிருக்கும். செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

கடைசி இரு நாட்கள் தவிர இது ஒரு நல்ல வாரமாயிருக்கும். பண நிலைமைகள் திருந்தும். குடும்ப சமாதானமும் மனச் சமாதானமும் நிச்சயம். கடைசி இரு நாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

பணத்துறையில் நல்லவாரம். ஆனல் மனச்சமாதான மிருக்கமாட்டாது. வழக்குகளுக்கும் இரகசியப் பகைவர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்.

## வாழ்க்கை வானில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது இந்தப் பயபத்தி அமைவு பணிவு காட்ட வேண்டாம் என்று கேட்டவர்களே இன்று அரசாங்க சேவையாளர்களிடம் அவற்றைக் கேட்கின்றுர்கள். கட்சிக்கொரு கட்டுப்பாடு!

### பாலைப் பூனை பாது காக்குமாம்!

தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்காகவே பாடுபடுகின்றுராம் பிரதமர். அம்மொழியை அழிப்பது நோககமல்லவாம். வைகாசி முதலாம் நாள் வைபவப் பேச்சிலே பிரதமரின் பொன் மொழிகளில் இதுவும் ஒன்று. பூனை பாலைப் பருகுவது அப்பாலைப் பாது காப்பதற்காகவே!


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு
கனகசபை கைம்பெண் செல்லமுத்து —வழக்காளி.
இல, MB 396.

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு
1. பெரியாட்பாலனும்
2. பெண் சின்னத்தங்கமும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 396 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுகாணி 1957 ஆனிமீ 6வ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் கபணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2266/- ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் ரூபா 2000 த்திற்கு 5-8-55 தொடக்கம் 1-12-55 வரைக்கும் 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா. 100/-

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை நீர் நீலி அடியும் நீர்நொச்சி அடியும் நிலை. இலா. 3 இதில் T, கந்தையா உலாந்தா மேஸ்தரால் விஸ்தாரிக்கப்பட்ட 1954 - ம் ஆண்டு சித்திரைமாசம் 4-ம் திகதி 33 - ம் இலக்கத்தைக் கொண்ட படத்தில் 2 டு என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட கிழக்குத் துண்டு நில, பர. 1 ம் குளி 8 2/5. இந்த நிலை. இலா. 1 குளி 8 2/5, கிணறும், அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு 8. சின்னையாவின் ஆதனம், மேற்கு கார்த்தி வயித்திலிங்கம் பெண் பூமணியின் முதலாம் நம்பர் துண்டு.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24 சப்பல்வீதி
யாழ்ப்பாணம்
24-4-57,
M 14 3-5-57 (ரூ. 200)


## மொழிபற்றி அரசாங்கமும் பிரசாரமாம்

தமிழ் மொழியின் நியாயமான உபயோக மென்பது நியாயமானதென்று சிங்கள சாதிச்சங்கம் வடக்குக்கிழக்கு மாகாணங்களிற் பிரசாரஞ் செய்யத் தீர்மானித்துள்ளதென்று செய்தி ஒன்று சொல்லிற்று. அரசாங்கமும் அப்படியே செய்யத் தீர்மானித்துள்ளதென்று மற்ருெரு செய்தி கூறுகின்றது

## அரிசி நிறுத்து விற்கும் ஒழுங்கு

அரிசி தராசிலிடப்பட்டு ஏனைய பொருள்கள்போற் கொழும்பில் நிறுத்து விற்கப்படுகின்றது. இம்முறையை யாழ்ப்பாணம், கண்டி, காலி முதலிய இடங்களிலும் நடைமுறைக்குக்கொண்டுவர அதிகாரிகள் ஆலோசிக்கின்றனராம்.

## பலாலி வயாவிளான் கி. மு; மாதர் கி. மு. சங்கங்களும் சனசமுக நிலையமும்

மேற்படி தாபனங்கள் மதிப்புக்குரிய சேவைகள் செய்திருப்பதாக அவற்றின் தொகுப்பறிக்கை தெரிவிக்கின்றது. அவற்றைப் பார்வையிட்ட அதிகாரிகளின்பாராட்டுரைகளை அவை பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

சபையின் சைவப்பிரகாச அச்சகத்திற்கு சைவசமய நூல்களிலும் தமிழிலும், பாண்டித்தியம் அடைந்தவரும், ஆங்கில அறிவுடையவருமாகிய ஒருவர் நூல் பிரசுர ஆசிரியராகத் தேவை. சபைக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும்.


## ஸ்ரீமத். சுவாமி விவேகானந்தரின் இணையற்ற தொண்டு

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

டுக்கும் சேவை செய்ய முடியாதிருக்கும் நிலைமையைக் கண்டார். கிராமம் கிராமமாகத் தன் பெயரை மாற்றி மாற்றிக் கொண்டு சென்று ஒவ்வொருவரையும் விசாரணை செய்தார். சமூகத்தில் பரவியிருக்கும் பெலவீனமே அவர்களின் கேட்டுக்குக் காரணம் ஆதலினால் ஒற்றுமையை வற்புறுத்தினர். மேற்கு நாட்டு மக்களின் குணதிசயங்களை எடுத்துப் பேசினர். ஆங்கிலேயர் எது விஷயத்திலும் தன் நம்பிக்கையுடையவர்கள் ஆதலினால் அவர்களின் நாடு செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்வதை எடுத்துப் பேசினர். தேகாரோக்கியத்தை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்தினர். இந்திய நாட்டுக்கு ஒரு பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கருதினர். உலக வாழ்க்கையில மயங்கிய மேல்நாட்டினருக்கு, இந்தியா சமய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வரவிருக்கும் பொறுப்பைக் கனுக் கண்டார். அவரது கனு இன்று நனவாகியிருக்கின்றது. பிரதமர் நேரு இன்று மேற்கு நாடுகளுக்குள் நிலவும் பூசல்களைத் தீர்த்து வைப்பதைக் காண்கின்றோம்.

சமூகச் சீர்திருத்தத்திலும் சுவாமியவர்கள் மிக ஊக்கம் செலுத்தினர். இந்திய நாட்டை இந்துசமயத்துடனேயே ஒருமித்துக் கருதினர். சர்வதேச சமய மகாநாட்டுக்குச் சென்று மேல் நாடுகள் வியப்படையும்வண்ணம் இந்துசமயத்தின் பெருமையை எடுத்துப் பேசினர். ஆதலினால் இன்றும் இந்துக்கள் அமெரிகக நாட்டில் உளர். அவர் பேச்சு ஆற்றோட்டம் போன்றது. தங்கு தடையின்றிச்செல்லும் வசீகரம் வாய்ந்தது. பொதுமக்களின் இருளை ஓட்டும் ஒளியாக அமைந்தது. அவர் செய்த வேலையை மக்கள் நன்றாய் அறியவில்லை. அவர் செய்த வேலையின் மகத்துவத்தை நாம் ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும்.

### குடியரசுப் பிரேரணை

இலங்கைக்குக் குடியரசுத் திட்டமொன்று அமைக்க வேண்டுமென்று முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக பாராளுமன்றத்திற் கொண்டுவந்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது. அத்திட்டம் சமஷ்டிக் குடியரசாதல் வேண்டுமென்னும் திருத்தத்தை ஸ்ரீ. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் செய்விக்க முற்பட்டபொழுது அவருடைய கருத்துக்கு இடங்கொடுக்கப்படாது மறுக்கப்பட்டது.

### இலங்கையில் வார்தா மேதாவி

இந்தியாவில் வார்தாக் கல்வித்திட்டத்தைக் காந்தி அடிகளின் கருத்துப்படி கையாண்டுவரும் மேதாவி ஸ்ரீ. இ. டபிள்யு. அரியநாயகம் அவர்கள் இந்நாட்டுக்கு வந்து பல விடங்களிற் சிறந்த சொற்பொழிவுகள் செய்து வருகின்றார். காந்திய வாழ்க்கைமுறைகளின் நலன்களை விளக்கி, எங்கள் கல்விமுறை திருத்தப்பட வேண்டிய தேவையை எடுத்துக் காட்டிக் கமத்தொழிலில் மக்கள் ஊக்கப்படுதல் வேண்டுமென்று தம் பேச்சுக்களில் அவர் வலியுறுத்தி வருகின்றார்.

### மாணக்கர் மதிவள மன்றம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுத்த மதயானை அவர்களுக்கே கூற்றாய் மாறியமை. கல்லுத் தெப்பமா யமைந்தமை. பல்லவன் சைவப் பணிபுரிந்தமை. திருத்தூங்கானைமாடத்திலே இடபசூலக் குறிகள் பொறிக்கப்பட்டமை. திருநல்லூரில் திருவடித் தீக்கை செய்யப்பட்டமை. பாம்பின் விடத்தைப் போக்கி உயிர் கொடுத்தமை. படிக்காசு பெற்று அன்னதானம் புரிந்தமை. வேதங்களாலே பூசித்தடைக்கப்பட்ட திருக்கதவந் திறந்தமை. வடதனி ஆலயத்தை வெளிக்கொணர்ந்தமை. சிவபிரான் அப்பருக்குப் பொதிசோறு அளித்தமை. காசித் தடாகத்திலே மூழ்கித் திருவையாற்று வாவியிலே தோன்றியமை. பொன்னும் - மணியுங் - கல்லுஞ் சமனுகக் கண்டமை. அரம்பையர்கள் இருவினையின் வடிவமாகக் கண்டமை. "எண்ணுகேன் என் சொல்லி" பாடிச் சிவபதம் அடைந்தமை

இதுவரை நாவுக்கரசர் புராணத்தில் நாம் கற்றுக்கொண்ட படிப்பனைகளையும், அவர் சரிதத்தின் பொருட் டொகுப்பையுங் கூறக்கேட்டீர்கள். நன்கு பதித்துக் கொள்ளுங்கள் மனதில். அடுத்தது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம். அடுத்த பாடத்தில் அதனைப் படிப்போம். முன்னதாக ஒருமுறை நீங்கள் வாசித்து வைத்துக்கொள்ளல் நல்லது.

வளரும்.


# யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.


**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14



## இந்தியாவில்
# 35 நாள்! 6000 மைல்!!

### காசி யாத்திரையும் ஆனி உத்திர சிதம்பர தரிசனமும்

★

சேது, இராமேஸ்வரம், மதுரை, திருப்பரங்குன்றம், பழனி, பங்களூர், மைசூர், மதருஸ், திருப்பதி, பம்பாய், எல்லோரா, ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம்) டெல்லி, அரித்துவாரம், லக்னே, அயோத்தி, அலகபாத், பனரிஸ் (காசி) காயா, கல்கத்தா, பூரி, சிதம்பரம் ஆகிய இடங்களைப் பார்த்து அங்குள்ள

இந்துமத பழம் பெரும் கோயில்கள் — புனித தீர்த்தங்கள் — இந்திய புராதன கலைச்செல்வங்கள் — அகிலஇந்திய கலாச்சாரம் முதலியவைகளை அறிந்து வர

**கட்டண விபரம் (இருநேர தாவர போசன வசதியுடன்)**

| | | |
|---|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா | 625 - 00 |
| இரண்டாவது வகுப்பு | | 475 - 00 |
| மூன்றாவது வகுப்பு | | 350 - 00 |

**இலங்கையிலிருந்து புறப்படும் திகதி 27-5-57**

( இதுவே மலிவு டிக்கட்டின் கடைசி மாதம் )

★ இவ்வரிய பொன்னன சந்தர்ப்பத்தைத் தவற விட்டுப் பின் துன்புறுதீர்கள்.

குறிப்பிட்ட அளவு யாத்திரீகளுக்கே இட வசதி உண்டென்பதையும் இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இதில் பங்கு பற்றலாம் என்பதையும முன்னரே அறியத் தருகின்றோம்.

☞ பாஸ்போட் — விசா மற்றும் விபரங்களுக்கு இன்றே எம்மிடம் வாருங்கள்; அல்லது எழுதுங்கள்.

**விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன்**
மலாயா - சிங்கப்பூர் - இந்தியா பிரயாண வசதி செய்பவர்கள்
31, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
( பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம் )
தந்தி: "சென்றவேல்" Grams "CENTRAVEL"


மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 3-5-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org